தீர்ந்து விடும் என்பதால் தான் பல காலமாக கல்வித் துறையிலே இதை பலரும் கோரிக்கையாக வைத்துக் கொண்டிருக்கிறார்கள். நம்முடைய புரட்சித் தலைவியினுடைய பொற்கால ஆட்சியிலாவது இந்த முறையை நீக்கினால் நம்முடைய கல்வித் துறையில் இருக்கும் ஆசிரியர் பெருமக்கள் அனைவரும் அவர்களுக்கு நன்றி உடையவர்களாக இருப்பார்கள். ஆகவே அதை உடனடியாக அமல்படுத்த அரசு முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11-15

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய சந்தேகம் தேவையில்லாதது என்று நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். ஏனெனில் கல்வித்துறையைப் பொறுத்தவரையில் இந்த அரசு பொறுப்பு ஏற்றுக்கொண்டதற்குப் பின்னால் ஒப்பந்த அடிப்படையில் ஆசிரியர்களை நியமனம் செய்கின்ற முறையை அடியோடு கைவிட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 56, திரு. வே. பெரியசாமி, மாண்புமிகு கல்வி அமைச்சர்.

56—

நெருஞ்சிப்பேட்டை அரசு உயர்நிலைப்பள்ளிக்கு தொலைக்காட்சிப்பெட்டி.

*21445—திரு. வே. பெரியசாமி :

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா:—

பெரியார் மாவட்டம், நெருஞ்சிப்பேட்டை அரசு உயர்நிலைப்பள்ளிக்கு மாணவர்கள் சிறப்பாக கல்வி பயில பாட சம்பந்தமான விவரங்கள் தெரிந்துகொள்ள தொலைக்காட்சிப்பெட்டி ஒன்று வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அனைத்து உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளிலும் தொலைக்காட்சிப் பெட்டி வாங்குவதற்கு ஏற்றவகையில் பொதுவான அரசாணை நடைமுறையில் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1993 அக்டோபர் 28]

திரு. வே. பெரியசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனைத்து மேல்நிலைப் பள்ளிகளிலும் வானொலிப் பெட்டி, தொலைக்காட்சிப் பெட்டி வாங்குவதற்கு பொதுவான அரசு ஆணை இருப்பதாக மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால், இங்கே ஒரு சில பகுதிகளுக்கு மட்டும் அவைகளை வாங்கிக் கொடுக்கின்றார்கள். நான் சொல்லு கின்ற பள்ளியானது பெரியார் மாவட்டம் அந்தியூர் தொகுதி நெருஞ்சிப்பேட்டையிலே கடந்த 4, 5 ஆண்டுகளுக்கு முன்னாலே புதிதாக ஆரம்பிக்கப்பட்ட பள்ளியாகும். அந்தப் பள்ளியின் கட்டிடத்திற்காக தனியாக நாங்கள் ஒரு குழுவினை அமைத்து அதைக் கட்ட ஏற்பாடு செய்து இருக்கிறோம். அரசின் மூலமாக எந்தவிதமான மானியத் தொகையும் பெறவில்லை. அப்படிப் பட்ட நிலையில் அங்கேயுள்ள மாணவர்கள் கட்டாயமாக தொலைக்காட்சிப் பெட்டி ஒன்று தேவை என்று என்னிடத்தில் கேட்டு இருக்கிறார்கள். கருணை உள்ளம் கொண்ட, அரசியல் வானிலே ஒரு விடிவெள்ளியாகவும் சமுதாய பாலைவனத்திலே ஒரு நீர் ஊற்றாகவும் பழம்பெரும் புரட்டுகளால் பாழடைந்த தாயகம் கண்ட மணி மண்டபமாகவும் விளங்கிக் கொண்டிருக் கின்ற எங்களது கடவுள் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவியின் ஆட்சியில் தனியாக அந்தியூர் தொகுதியில் உள்ள அனைத்து உயர்நிலைப் பள்ளிகளுக்கும் வானொலி பெட்டியை சிறப்புத் திட்டத்தின் கீழாக வாங்கித் தர அமைச்சர் அவர்கள் ஆவன செய்வாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர் கள் வானொலி என்று தொலைக்காட்சிப் பெட்டிக்குப் பதிலாக சொல்லியிருக்கிறார் என்பதை நான் அறிவேன். அரசு ஆணை எம்.எஸ்.எண் 178, கல்வி, நாள் 18—2—1993 ஆணையின்படி உயர்நிலை மற்றும் மேல்நிலை வகுப்புகளைச் சார்ந்த மாணவ மாணவியரிடமிருந்து ஆண்டுக்கு ரூ. 10 வீதம் பள்ளிகளில் ஒலி, ஒளி கருவி கட்டணமாக வசூல் செய்யப்பட்டு வருகிறது. இந்நிதியில் போதிய அளவு நிதி சேர்ந்தவுடன் இயக்குநரின் அனுமதியின் பேரில் வானொலி, தொலைக்காட்சிப் பெட்டியும் பின்னர் சேரும் நிதியிலிருந்து வி.சி.ஆர்., ஜெமக் செட், புரொ ஜெக்டர் போன்ற ஒலி, ஒளி கருவிகளும் வாங்க ஆவன செய்யுமாறு இயக்குநரின் பா. மு. எண் 1591850 ஈ.டி.சி. 3/93, நாள் 3—3—1993 செயல்முறைகளில் வலியுறுத்தப்பட்டு இருக்கிறது. அவ்வாறு தற்போது பல்வேறு உயர்நிலை மற்றும் மேல்நிலை பள்ளிகளுக்கும் வானொலி, தொலைக்காட்சி பெட்டி போன்ற ஒலி, ஒளி பெட்டிகள் வாங்கப்பட்டு வருகின்றன என்பதை உறுப்பினருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். அரசின் ஆணை எம். எஸ். எண் 178, கல்வி, நாள் 18—2—1993 ஆணைகள் வழங்கப்படுமுன்னர் ஒவ்வொரு மாணவ மாணவியரிடமிருந்தும் ஆண்டுக்கு ரூ. 7 மட்டும் விருப்பத்தின்படி வசூல் செய்யப்பட்டு

வந்தது. அது தற்போது ரூ. 10 ஆக மாற்றி உயர்த்தப்பட்டிருக்கிறது. பள்ளியைச் சார்ந்த ஏனைய தலைப்பு நிதியிலிருந்தும் ஒலி, ஒளி கருவி கட்டணத் தலைப்புக்கு நிதி மாற்றம் செய்து வானொலி, தொலைக்காட்சிப் பெட்டிகள் வாங்கவும் ஆவன செய்யப்பட்டுள்ளது. மேலும் பெற்றோர் ஆசிரியர் கழக நிதியிலிருந்து நன்கொடையாகவும் தொலைக்காட்சிப் பெட்டி பெறுவதற்கு அனுமதி தரப்பட்டிருக்கிறது. நெருஞ்சிப்பேட்டை அரசு உயர்நிலைப் பள்ளியின் மீது அதிக அக்கறை காட்டுகின்ற மாண்புமிகு உறுப்பினர் பெரியசாமி அவர்கள் பெற்றோர் ஆசிரியர் கழகத்தோடு தொடர்பு கொண்டு உடனடியாக அதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 57, திரு. ஆ. அறிவழகன், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

57—

மாயனூர் தென்கரைக்கால்வாய் கூட்டுக் குடிநீர் திட்டம்.

*9331—திரு. ஆ. அறிவழகன் :

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டம், குளித்தலை தாலுகா கிருஷ்ணராயபுரம் ஒன்றியத்தில் மாயனூர் தென்கரை கால்வாயிலிருந்து கூட்டுக் குடிநீர் திட்டத்தின் கீழ் புதுப்பட்டி, வேங்கம்பட்டி, மேட்டுப்பட்டி, சரவணபுரம் ஆகிய ஊர்களுக்கு குடிநீர் வழங்க அரசின் செயற்குறிப்பில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்வி எழாது.

திரு. ஆ. அறிவழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி மாவட்டம், குளித்தலை வட்டம், கிருஷ்ணராயபுரம் ஒன்றியத்தில் உள்ள கருப்பத்தூர் ஊராட்சி மன்றத்தில் வேங்கம்பட்டி, தாலியாம்பட்டி, மேட்டுப்பட்டி, குழந்தப்பட்டி சரவணபுரம் ஆகிய ஊர்களில் குடிநீர் இருந்தும், அங்கே உப்பு